## இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை

அறிவித்தல்

2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல்களுக்கான உரிமைச் சட்டத்துக்கு இணங்க

தகவல்களுக்கான கோரிக்கைளை படிவம் RTI 01 ,ல் விதித்ரைக்கப்பட்டவாறு பூர்த்தி செய்யப்பட்டு பின்வரும் தகவல் அலுவலரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும். படிவம் கட்டாயமல்லாத போதிலும் அது விரும்பத்தக்கதாகும்.


தகவல் அலவலர்
திருமதி தி.எம்.எஸ்.பி.திசாநாயக்க,
முகாமையாளார் (ஆவணம் மற்றும் இணைய முகாமை)
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை
இல152/1,மினுவாங்கொட வீதி,
கட்டுநாயக்க.

மின்னஞ்சல் : mgrdw@caa.lk
தொலைபேசி இலக்கம் : +94 112358944/+94 766317390


1. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் எண் RTI 01 ஐச் சமர்ப்பிப்பதன் மூலமோ அல்லது தகவல் அலுவலரிடம் ஒரு கடிதம் அல்லது வாய்வழி கோரிக்கையைச் சமர்ப்பிப்பதன் மூலமோ நீங்கள் தகவல்களைப் பெறலாம். உங்கள் சமர்ப்பிப்பின் எழுத்திலான உறுதிப்படுத்தலை சேகரித்தல் வேண்டும்.

2. தகவல்களை வழங்குவதா அல்லது இல்லையா என்னும் தீர்மானம் முடிமானவரை விரைவில், எவ்வாறாயினும் 14 நாட்களினுள், வழங்கப்படவேண்டும்.

3. தகவல்களை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டால் தகவல்களுக்கான உரிமை ஆணைக்குவினால் விதித்துரைத்தப்பட்ட கட்டண அட்டவணைக்கு இணங்க கட்டணம் ஒன்றைச் செலுத்தியதும் தகவல் வழங்கப்படும் என கோரிக்கையை விடுத்த பிரஜைக்கு தகவல் அலுவலர் தெரிவிபிபார். தகவல் கட்டணம் ஒன்றின் கொடுப்பணவுக்கு உட்படுமாயின் கொடுப்பணவை மேற்கொண்டு 14 நாட்களினுள் தகவல் வழங்கப்படுதல் வேண்டும். கட்டணம் ஒன்றைச் செலுத்த வேண்டிய தேவை இல்லையாயின் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு 14 நாட்களினுள் தகவல் வழங்கப்படும்.

4. கட்டணத்தை செலுத்திய பின்னர் அலுவலர தகவல் வழங்க முடியாதாயின் தகவல்களை வழங்குவதற்கு ஆகக்கூடியது 21 நாட்கள் வரை மேலும் காலம் நீடிக்கப்படும் என நீடிப்புத்தான காரணங்களை வழங்கி தகவல்களைக் கோரிய ஆளுக்குத் தெரிவிக்கப்படும்.

5. கோரிக்கை ஒரு பிரஜையின் வாழ்க்கை மற்றும் சொந்த சுதந்திரத்துடன் தொடர்பானதாக இருக்கும் போது தகவல் அலுவலர் 48 மணித்தியாலங்களுக்குள் வேண்டுகோளுக்கான பதில் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

6. பின்வரும் சந்தர்ப்பங்களில் மேன் முறையீடு ஒன்று மேற்கொள்ளப்படலாம்
   i. தகவல்களுக்காக வழங்கப்பட்ட கோரிக்கை ஒன்றை அலுவலர் மறுத்தல்
   ii. பிரிவு 5 இன் கீழ் அத்தகைய வழங்குதல் விலக்களிக்கப்பட்டுள்ளது என தகவலை பெற அணுகுவதற்கு தகவல் அலுவலர் மறுத்தல்.
   iii. சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட கால வரையறை இணங்கி ஒழுகாமை.
   iv. தகவல் அலுவலர் புரணமற்ற தவறாக இட்டுச் செல்லும் அல்லது பொய்யான தகவல்களை வழங்கியிருக்கல்.
   v. தகவல் அலுவலர் மேன் மிகையான கட்டணங்களை விதித்திருத்தல்.
   vi. கோரிப்பட்ட வடிவத்தில் தகவலை வழங்குவதற்கு தகவல் அலுவலர் மறுத்திருத்தல்.

vii. தகவலுக்காக அணுகுவதிலிருந்தும் தன்னைத் தடுப்பதற்காக தகவல் உருகுலைக்கப்பட்டுள்ளது அழிக்கப்பட்டுள்ளது அல்லது தவறாக இடப்பட்டுள்ளது என கோரிக்கையை விடுக்கும் பிரஜை நியாயமான ஏதுக்களை கொண்டிருத்தல்

ஒரு மேன் முறையூடு குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு 14 நாட்களினுள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

<u>குறித்தளிக்கப்பட்ட அலுவலர்</u>
திரு. ஆர். எம். வன்னியப்பா
துணை பணிப்பாளர் தலைமையதிபதி (வான் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள்)
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை
இல 152/1 மினுவன்கொட வீதி
கட்டுநாயக்க

மின்னஞ்சல் : dater@caa.lk
தொலைபேசி இலக்கம் : +94 112358863/+ 94 773130027

7. இந்த அறிவித்தலின் பின்னர் பிரிவு 6 இல் குறிப்பிட்டவாறு மேன் முறையீட்டை மேற்கொள்ளும்போது புர்த்தி செய்யப்பட்ட **RTI 10** படிவம் குறித்தளிக்கப்பட்ட அலுவலரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும். **RTI 10** படிவம் கட்டாயமானதல்ல கோரிக்கை ஒன்றை விடுக்கும் ஒரு பிரஜை **RTI 10** படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை தகவல்களை வழங்கி மேன் முறையீட்டை நியாயப்படுத்தி கடிதம் ஒன்றை வழங்குவதன் மூலமும் மேன் முறையீட்டை மேற்கொள்ள முடியும்.

பீ. ஏ. ஜயகாந்த,
பணிப்பாளர் தலைமையதிபதி, சிவில் விமானப் போக்குவரத்து மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி

23 ஒக்டோபர் 2023